
# கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2035 (சுபானு ஆண்டு) பங்குனித் திங்கள்



புதையலில் கிடைத்த அய்யனார் செப்புத் திருமேனி, சோமநாதர் திருக்கோயில், நீடூர், நாகை மாவட்டம். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு

கல்வெட்டுக் காலாண்டிதழ் : 62 (ஏப்ரல் 2004) விலை ரூ. 5-00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே......

பக்கம்

பதிப்புரை

1. திருச்செந்தூர் கோயில் மேலைக்கோபுர ஆய்வு
— சீ. இராமச்சந்திரன் ... ... 2

2. முன்னூர் வளஞ்சியர் கல்வெட்டு
— நாக, கணேசன் ... ... 5

3. TACTICS FOR KINGS
— Dr. S. Soundarapandian ... ... 7

4. விருத்தாசலம் படித்துறைக் கல்வெட்டு
— ச. செல்வராஜ் ... ... 9

5. கருவிளங்காட்டில் சப்த மாதர் சிற்பங்கள்
— தி. சுப்பிரமணியன் ... ... 12

6. தரங்கம்பாடிப் பகுதியில் கண்டறியப்பட்ட தொல்லியல் தரவுகள்
— கா. நெடுஞ்செழியன் ... ... 14

7. கன்னியாகுமரிப் பகுதியில் புதிய கல்வெட்டுகள்
— தே. கோபாலன் ... ... 18

8. புதையலில் கிடைத்த ஐயனார்
— கோ. முத்துசாமி ... ... 25

கல்வெட்டு இதழ்களில் இடம் பெற்ற கட்டுரைகள் (1974 முதல் 2003 வரை) - சென்ற இதழ் தொடர்ச்சி .... 27

## குறிப்பு

*நிர்வாகக் காரணங்களால் ஜூலை 2003 முதல் ஜனவரி 2004 வரை கல்வெட்டு காலாண்டிதழ்களை வெளிக் கொணர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை

மூன்றாவது குறுக்குச் சாலை,
சி.ஐ டி. வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.

# பதிப்புரை

இந்திய நாட்டிலுள்ள கல்வெட்டுகளின் எண்ணிக்கையில் 50 சதவீதக் கல்வெட்டுகள் தமிழகத்தில்தான் உள்ளன. அவையே தமிழக வரலாற்றினை எழுதவும், சமூக நிலையினைப் புரிந்து கொள்ளவும், கைவிளக்குகளாக உதவு கின்றன. தமிழகம் முழுவதிலும் எங்கு சென்றாலும் பண்டைய சமுதாயம் விட்டுச் சென்றுள்ள தரவுகள் கொட்டிக் கிடக்கின்றன. ஒவ்வொரு ஊரும் வரலாற்றுக் கூறுகளைத் தன்னிடம் பொதிந்து வைத்துள்ளது, நாம் அவற்றின் அருமையினை அறியாமலும், அவற்றைப் போற்றிக் காக்கத் தெரியாமலும் நாள்தோறும் அழியவிட்டுக் கொண்டிருக்கிறோம்,

தமிழகத்தில் சோழ மன்னர்களான முதலாம் இராஜேந்திரனால் (கி.பி. 1012-44) உருவாக்கப்பட்ட கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயிலும், இரண்டாம் இராஜராஜனால் (கி.பி. 1146-1172) உருவாக்கப்பட்ட தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலும், பாதுகாக்கப்பட்ட உலக மரபுச் சின்னங்கள் வரிசையில் இணைக்கப் பட்டுள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும்.

தமிழகத் தொல்லியல் துறை தம் அலுவலர்கள் மூலம் கள ஆய்வு மேற் கொண்டு கண்டறிந்த ஒருசிலவற்றை அவ்வப்போது கல்வெட்டு காலாண்டிதழ் மூலம் வெளியிட்டு வருகிறது. இளைய சமுதாயத்தினர்க்கு வரலாற்று உணர்வினைத் தோற்றுவிப்பதாகவும், தொல்லியல் ஆய்வாளர்கட்கு புதிய தகவல்களைத் தெரிவிப்பதாகவும் அமையும் என்ற நம்பிக்கையில் இவை வெளியிடப்படுகின்றன.

கல்வெட்டிதழ்களில் இதுகாறும் வெளியிடப்பட்ட கட்டுரை மற்றும் செய்திகளின் தொகுப்பு சென்ற இதழில் தொடங்கி இவ்விதழில் நிறைவடைகிறது, கன்னியாகுமரிப் பகுதியில் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளும், தரங்கம்பாடி அகழ்வைப்பகத்திற்குச் சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களும், வழிபாடற்றுக் கிடக்கும் பல்வேறு சிற்பங்கள் மற்றும் கட்டடக்கலை பற்றிய சிறுசிறு கட்டுரை களும், மார்க்கண்டேய புராணத்தில் கூறப்பட்ட வெற்றிக்கு அடிப்படையான அறிவுரை பற்றிய ஆங்கிலக் கட்டுரையும் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.

# திருச்செந்தூர் கோயில் மேலைக் கோபுர ஆய்வு

1

சீ இராமச்சந்திரன்,
கல்வெட்டாய்வாளர்,

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு வட்டத் தலைநகராக அமைந்துள்ளது திருச்செந்தூர். அலைவாய் என்றும், செந்தில் என்றும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் திருச்செந்தூர், முருகனது அறுபடைவீடுகளுள் ஒன்றாகும். இக்கோயிலில் பாண்டிய மன்னன் இரண்டாம் வகுரணனின் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படினும், அது தனிக்கற்களில் பொறிக்கப்பட்டிருப்பதால் அக்கால கட்டத்தில் இக்கோயிலின் கட்டுமானம் செங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கலாம் என நாம் அனுமானிக்க முடிகிறது. தற்போதைய கோயிற் கட்டுமானம் கி. பி. 18-19-ஆம் நூற்றாண்டுக் கால கட்டத்தைச் சேர்ந்ததாகும். இக்கோயில் வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கது மேலைக் கோபுரமாகும். 153 அடி உயரம் கொண்ட இக்கோபுரம், மொத்தம் 11 தளங்களைக் கொண்டுள்ளது. தரை மட்டத்தில் அமைந்துள்ள கீழ்த்தளமும் (வாயில் நிலை) அதன் மேல் அமைந்துள்ள இரண்டாம் தளமும் முற்றிலும் கருங்கற்களால் அமைக்கப்பட்டவை. இவற்றின் மேல் அமைந்துள்ள ஒன்பது தளங்களும் செங்கல், சுதை, மரம் ஆகியவற்றால் அமைக்கப்பட்டவை. கோபுர வாயிற் கதவிலும், மூன்றாம் தளம் முதல் 11-ஆம் தளம் வரையிலும் உட்புறத்திலமைந்துள்ள மரத்தூண்களிலும் மரச் செதுக்கு வேலைப்பாடுகள் உள்ளன. செங்கல்லாலான தளம் ஒவ்வொன்றிலும் கிழக்கிலும் மேற்கிலும் கீர்த்திமுகத் திருவாசித் திறப்பு உள்ளது. அரண்மனைகளில் உள்ள ஷர்ஜா வாசல் போன்றும், மாடி வீடுகளில் அமைந்துள்ள பால்கனி (balcony) போன்றும் இவ்வமைப்பு காணப்படுகிறது.

கீர்த்தி முகத் திருவாசியுள்ள ஐந்தாவது தளத்தின் மர "நிலை"யில் எழுத்துப் பொறிப்பு உள்ளது. கொல்லம் ஆண்டு 958 (கி,பி. 1783)-ஐச் சேர்ந்தது இப்பொறிப்பு ஆகும்.

**பொறிப்பு வாசகம்**

உ சுபாநுஅவூ
மாசி மீ௳ எ உ வெள்ளி
கிழமை பிள்ளை குள
ம் சிவனணைஞ்ச னா
டான் உபையம்
முப்பது பணம் உ

***செப்பேட்டுச் செய்தி***

இக்கோபுரம் கட்டப்பட்டது குறித்து திருவாவடுதுறை ஆதீனத்தின் வசம் உள்ள ஐந்து செப்பேடுகளில் செய்தி உள்ளது. கி. பி. 1779-ஆம் ஆண்டில், திருவாவடுதுறை ஆதீன கர்த்தரின் முன் முயற்சியில், பாஞ்சாலங்குறிச்சி ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன், சாத்தூர் எறாப்ப நாயக்கர், ஏழாயிரம் பண்ணை முத்துசாமி ஆண்டு கொண்டார் ஆகிய பாளையக்காரர்களும், சிவகாசி நாடார்களும், தூத்துக்குடிக்கு அருகிலுள்ள ஏழூர் தட்டாப்பாறை வணிதம் சூழ்ந்த கிராமத்து மகாஜனம் பிள்ளைமார் ஆகியோரும் இக்கோபுரம் எழுப்பிடக் கொடை வழங்கியுள்ளனர் என இச்செப்பேடுகள் மூலமாக அறிய முடிகிறது.[1] ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி, ஆர்க்காட்டு நவாப் ஆகியோரின் நிலவருவாய் நிர்வாகத் தலையீட்டை எதிர்த்து நின்றவர்களில் பாளையக்காரர்கள் முதன்மையானவர்களாவர்.[2] திருத்தலப் பயணிகள் நிறைந்த அளவில் கூடுகிற ஒரு வழிபாட்டுத்தலத்தை மேம்படுத்தும் பணியில் ஆதீனகர்த்தர்கள் ஈடுபடுவது புதுமையானதல்ல. எனினும் புரட்சியணிப் பாளையக்காரர்கள் இப்பணியில் முதன்மையாக ஈடுபட்டதைப் பார்க்கும் போது பொதுமக்களின் சமய உணர்வு களைக் கூர்மைப்படுத்தி ஆர்க்காடு நவாபுக்கும் ஆங்கிலேயர்க்கும் எதிராக அணி திரட்டும் நோக்கம் இத்திருப்பணியின் பின்னணியில் இருந்திருக்கக் கூடும் என நம்மால் உணரமுடிகிறது.

நமது ஊகத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் ஒரு முன்னோடி நிகழ்வு நடந்துள்ளது. கி.பி. 1760-ஆம் ஆண்டில் நெற்கட்டுஞ் செவல் பாளையக்காரர் பூலித்தேவர், கான் சாகிபின் முற்றுகையிலிருந்து தப்பி இராமநாதபுரம் சீமைக்குச் சென்றார் என்று பாளையப்பட்டுகளின் வம்சாவளி தெரிவிக்கிறது. இக்கால கட்டத்தில் இராமநாதபுரம் ''ரிபெல் சேதுபதி'' எனப்படும் முத்துராமலிங்க சேதுபதியுடன் சேர்ந்து, சைவ சமயத் திருத்தலங்களுள் காசிக்கு இணையாகச் சிறப்பித்துக் கூறப்படும் இராமேஸ்வரம் திருக்கோயிலின் திருச்சுற்றினைக் கட்டுவிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார் என்று, பாளையப்பட்டுகளின் வம்சா வளியினைத் தொகுப்பித்த காலின் மெக்கன்சியின் ஒரு குறிப்பிலிருந்து நாம் ஊகித்தறிய முடிகிறது.[3] எனவே திருச்செந்தூர்க் கோயில் மேலைக் கோபுரத் திருப்பணிக்குப் பின்னணியில் இத்தகைய அரசியல் நோக்கம் இருந்திருக்கலாம். மேலைக் கோபுர வாயிற் கதவில் செதுக்கப்பட்டுள்ள மரச் சிற்பங்களுள் ஒன்று ஒரு குதிரை வீரன் மற்றொரு குதிரை வீரனை வீழ்த்தும் காட்சியாகும்.

---

1. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள், ச. கிருஷ்ணமூர்த்தி
2. சிதம்பரவன்னியன் வம்சாவளி, பாளையப்பட்டுகளின் வம்சாவளி, தொகுதி IV ப.91, பதிப்பு; க. குழந்தைவேலன், தொல்லியல் துறை.

Asiatic Researches - Vol. VI chapter XI Remarks on some antiquities on the west and south coasts of Ceylon written in the year 1796 by captain Colin Mekenzie p.427 - Cosmos Publications, Delhi-1972.

வீழ்த்துகின்ற குதிரை வீரன் கிரீடமும், வீழ்த்தப்படுகின்ற குதிரை வீரன் இஸ்லாமியப் பாணி தொப்பியும் அணிந்திருப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்

கோபுரத்தின் பத்தாவது தளத்தின் உட்புறத்தில் சுவர் ஓவியங்கள் உள்ளன. ஓவியங்கள் குறித்த விளக்கங்களும் வண்ணத்தால் எழுதப்பட்டுள்ளன. 1995-ஆம் ஆண்டில் கோயில் திருக்குட நன்னீராட்டு நடை பெற்ற போது இவ்வோவியங்கள் சுண்ணாம்பு அடித்து மறைக்கப்பட்டுவிட்டன. சில இடங்களில் சுண்ணாம்பு உதிர்ந்துள்ளதால் ஓவியத்தின் சில பகுதிகளும் எழுத்துகளும் வெளியில் தெரிகின்றன. ''மேலும் வளந்த படியினாலே ராசா வெகு வெதநத் தோடே சுவாமி .......'' என்ற வாசகம் எழுதப்பட்டிருப்பது தெரிய வருகிறது. கந்த புராணக் காட்சிகளாக இவ்வோவியங்கள் இருக்கக்கூடும். இவ்வோவியங்கள் முற்றிலும் வெளிப்படுத்தப்படும் போது மேலும் பல விவரங்கள் தெரிய வாய்ப்புள்ளது.

## தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் பெருங்கற்காலப் பானை ஓடுகள் கண்டறியப்பட்டுள்ள இடங்கள்

### திருவைகுண்டம் வட்டம்

1. திருவைகுண்டம் கோட்டைப் பகுதி
2. சிவகளை பறம்பு
3. பராக்கிராமபாண்டி . புதையல் மேடு
4. வெள்ளூர் - பெருமாள் கோவில் திடல், சாத்தாங்கோவில் அருகில், மேலப் பெரிய களம்
5. சேறைக்குளம் - வெட்டிக்குளம், கண்மாய்ப்பகுதி.

### ஓட்டப்பிடாரம் வட்டம்

1. கொத்தாளி - நத்தம் கல்வட்டம் (Cairn circle) இருந்துள்ளது
2. சங்கம்பட்டி - ஊர் எல்லை மாடன் கோயிற்பகுதி
3. மலைப்பட்டி - இளவேலங்கால் செல்லும் வழி
4. காட்டுநாயக்கன் பட்டி - மாலக்கோயில் பகுதி

### கோவில்பட்டி வட்டம்

1. நாலாட்டின்புதூர் - நத்தமேடு
2. இளம்புவனம் - இளம்ப நத்தம் பகுதி
3. கீழ ஈரால்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

# 2 முன்னூர் வளஞ்சியர் கல்வெட்டு

**நாக. கணேசன்,**
காப்பாட்சியர்

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், முன்னூர் கிராமத்தில் ஊரின் வடபுறம் உள்ள ஒழுங்கற்ற செவ்வக வடிவிலான தனிக் கல்லின் இருபக்கங்களிலும் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. 141 செ.மீ. உயரமும், மேல்பகுதியில் 53 செ,மீ. அகலமும் கீழ் பகுதியில் 63 செ.மீ. அகலமும் கொண்ட அக்கல்லின் ஒரு பக்கத்தில் இருபது வரிகளிலும் மறுபக்கத்தில் பத்து வரிகளிலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இடையிடையே கல்வெட்டு பொறிந்து காணப்படுகிறது. இக்கல்லினை முனியப்பன் கல் என்று மக்கள் அழைக்கின்றனர். இக்கல்லின் மேற்குப் பக்கத்து தோட்டத்தில் பதினோறு செக்குகள் காணப்படுகின்றன. கொங்குச் சோழனான மூன்றாம் வீரசோழனின் (கி.பி.1168-1196) அதிகாரி சிவசரண கண்டன் என்பவன் வீரசோழனின் பதினைந்தாவது ஆட்சி யாண்டில் வளஞ்சியரோடு கொண்டிருந்த பகைமை நீங்கியதை வெளிப்படுத்தும் வகையில் இடை பூதி நாட்டு முன்ன ஊர் கோயில் இறைவனுக்கு முற்றூற்றுத் தேவதானமாக வளஞ்சியரிடம் வழங்கிய நிலக்கொடை பற்றியும் அதற்கான எல்லைகள் பற்றியும் இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. தற்போது முன்னூர் என்று அழைக் கப்படும் இவ்வூர் அன்று முன்ன ஊர் என்று அழைக்கப்பட்டமை இக்கல்வெட்டால் அறியக் கிடைக்கின்றது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ[ப்*]பரகேஸரி வர்ம[க்]கு யாண்
2. டு[15] ஆவது கோனே[ா]ரிஇன்மை
3. கொண்டான் திரு . . . . .
4. . . . . . . . பெருமாளுக்கு ஸ்ரீவீரசோழனான
5. சிவசரண கண்டன் வ
6. ளஞ்சியரோடு பகை திருந்தி
7. குடு[த்]தமைக்கு இடைபூதி நாட்டு

8. முன்ன ஊர்[க்]கு இசைத்த வெ
9. ல்லை கீழ்பார்கெல்லை த
10. லை ஊற்று நிலத்துக்கு மேக்கு
11. நெற்று சாலைக்கு வ[ட]க்கும் தென்
12. பார்க்கெல்லை பரம[த்]தி நில[த்*]துக்கு வடக்கு
13. ம் மேல்பார்கெல்லை கழலைய் நில
14. து[க்]கு கிழக்கும் நாகமங்கலநில[த்]து[க்]கு கிழ
15. க்கும் வடபாற்கெல்லை விதரிநில[த்]து[க்]கு தெக்கு
16. யிவிசைத்த [பெ]ருநான்கெல்
17. லையும் முன்னிலம் மொ
18. ழிவின்றி பல்லுருவில் பசு
19. மரமும் உட்பட்ட உடு
20. ம்போடி ஆமை தவழ்ந்

*பின்பக்கம்*

21. த எப்பேர்பட்டது
22. பூராவும் மீரவும்
23. நற்று பு[ல்]லும் போக
24. முற்றூற்று தேவ
25. தாநமாக வளஞ்
26. சியர்[க்கு]
27. . . . . . . . .
28. . . . . . . . காத்தா
29. ன் . . . . . . முடிமே
30. லின [இத்த]மம் அழித்
31. . . . . . . . .

## 3 TACTICS FOR KINGS

**Dr. S. Soundarapandian,**
**Curator**

We could glean many tactics in the advice of Matalasa, to her son Arkkan recounted in Markandya Purana, a Sanskrit treatise.

Matalasa's ways are quite suitable for even today's world.

So, we can ponder over her tricks which can be listed out simply as follows :-

1. Never divulge your secret talks.

2. Use spies to know whether your own minister or officials are having underhand dealing with your enemy.

3. Never believe your friends and relatives solely.

4. Make friendship even with your enemies for your betterment.

5. First make sure that your own officials will not stab at your back and then fight with your enemy.

6. Wait for time to smash your enemies.

7. If you are entangled amidst your enemies, don't show your true colours, until you come out of them safely.

8. Make your enemies to believe that you are not liking other's properties and at the appropriate time never forget to grab their kingdom.

9. Never hesitate to spend your wealth for your rule; but at the same time, be adding wealth by all means.

10. Try to enjoy your life; don't be worrying about the possible evils that may befall on you.

11. Always keep doing things such that your enemies strength is deteriorated, day by day.

12. Strengthen your battalions.

13. Learn to show your grim visage and smiling face according to situations.

14. Keep your people at your command and service by attracting them through all means.

15. Make your people to believe that it is sin to aspire for king's wealth; and in this way, protect your assets.

4-ம் பக்கத் தொடர்ச்சி

**திருச்செந்தூர் வட்டம்**

1. கடம்பாகுளம் - தென்புரையூர்ப் பகுதி - கடம்பாகுளம் படுகை
2. செம்போர் - பறம்பு
3. நங்கைமொழி அடைக்கலாபுரம் - கரிசல் விளைப்பகுதி

**விளாத்திகுளம் வட்டம்**

1. நாகலாபுரம் - பேராயிரக்குடிக் கண்மாய்க்கரை, கோட்டைமேடு
2. வெம்பூர் - கண்மாய்க்கரை
3. அளகாபுரி நத்தக்காடு (பளபளப்பான பானையோடுகள்-puff variety)
4. மேலக்கரந்தை - நத்தக்கிடங்கு
5. கீழக்கரந்தை - இராமனா ஊருணிக்கரை

**தூத்துக்குடி வட்டம்**

1. வெங்கடேசபுரம் - உடைமரக்காட்டுப் பகுதி

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம்

# 4 விருத்தாசலம் படித்துறைக் கல்வெட்டு

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், விருத்தாசலத்தில் ஊரின் மையத்தில் ஓடும் புண்ணிய நதி மணிமுத்தா நதியாகும். இதன் தென்கரையில் விருத்தகிரீஸ்வரர் கோயில் என்னும் பழமலைநாதர் திருக்கோயில் உள்ளது. இறைவன் விழாக்காலங்களில் தீர்த்தமாடுதல் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். அதன் பொருட்டு இம்மணிமுத்தாற்றங்கரையில் ஒரு படித்துறையும்; மண்டபமும் கட்டப்பட்டு, அம்மண்டபத்தில் கட்டியோரின் திருவுருவச் சிற்பங்களையும் அமைத்து கல்வெட்டு ஒன்றையும் பொறித்துள்ளனர்.

கலிவருடம் 4815, சக வருடம் 1636 (கி.பி. 1714) இல் இப்படித்துறை கட்டப்பட்டுள்ளது. சென்னப்பட்டணம் ஆயிரவர் நகரத்தாரில் பெரிய நதி மகா ரிஷி கோத்திரத்தைச் சேர்ந்த ராகுவ செட்டியார் குமாரர் திருவிளப்ப செட்டியார் மகன் தியாகப்ப செட்டியாரின் மகன்களான தியாகம் வேங்கிட்டி செட்டியாரும் அவர் தம்பி காளத்தி செட்டியாரும் பொருளுதவி செய்துள்ளனர். அவர்கள் செய்த பொருளுதவியில் ஒலோகமாதேவிபுரத்தார் வகையைச் சேர்ந்த செட்டியப்ப ஞானியார் இப்படித்துறையைக் கட்டியுள்ளார். இந்த கல்வெட்டுச் சாசனத்தை ஆயிரவர் மடத்தைச் சேர்த்த அருணாசல பண்டாரம் ஏற்படுத்தியதோடு அனைத்து காரியங்களையும் மேற்பார்வைச் செய்துள்ளார்.

கல்வெட்டின் தொடக்கத்தில் கலியுகம் பிரம்மதேவனின் ஆயுளாக குறிப்பிடப்பட்டு அதனில் 51-வது வருடத்தில் ஆறு மனு அரசர்கள் ஆட்சி முடிந்து ஏழாவது மனுவின் ஆட்சியில் கலிவருடம் தோன்றியது என்ற புராணச் செய்தி சொல்லப்பட்டுள்ளது. விருத்தகிரீஸ்வரர் என்பது பழமலைநாதர் என்று தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.* கி. பி. 1714 - இல் சென்னை சென்னப்பட்டனம் என்று அழைக்கப்பட்ட செய்தியும் இக்கல்வெட்டால் அறிய முடிகிறது. இதில் 'விருத்தம்' என்ற முதுமைக்கு 'பழம்' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது சிறப்பான ஒன்று.

## படித்துறையின் அமைப்பு

இங்கு கட்டப்பட்டுள்ள படித்துறை கற்களால் அமைக்கப்பட்ட ஒன்று. இரு கரைகளிலும் சிறிது தூரமும், தெற்குக் கரையை ஒட்டி 400 மீட்டர் நீளமும் கட்டப்பட்டுள்ளது. இதனைப் பற்றி உள்ளூர் மக்கள் கூறும்பொழுது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் காலகட்டங்களில் அந்த வெள்ளம் கோயிலின் கிழக்கு வாயில் வழியாக உட்புகுந்து விடும். அதனுடன் இப்பகுதிவாழ் மக்களின் வாழ்விடங்களையும் இயற்கையின் சீற்றத்தால் மழைநீர் கொண்டு சென்றுவிடும்.

இதன் காரணமாக மக்கள் தங்கள் வாழ்விடங்களை அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டியதாகவும் இருந்துள்ளது. ஒரு சமயம் இரவில் காட்டாற்று வெள்ளம் புகுந்தமையால் பெருத்த சேதம் ஏற்பட்டது என்பதையும் அறிய முடிந்தது. எனவேதான் ஆற்றின் போக்கின் திசையைச் சற்று மாற்றிக் கோயிலை ஒட்டிச் செல்வதுபோல படித்துறை ஒன்றை அமைத்து மிகவும் நீண்டவடிவில் கட்டியுள்ளனர். படித்துறைகள் இவ்வளவு நீளத்தில் கட்டப்பட்டுள்ளது ஓர் தனிச் சிறப்பே. இதன் மூலம் பழமை வாய்ந்ததும், புண்ணிய ஸ்தலமுமான திருக்கோயிலைப் பாதுகாக்கவும், மக்களை இயற்கையின் சீற்றத்தில் இருந்து காக்கவும் இந்த படித்துறை ஒரு சிறப்பான ஏற்பாடாக அமைகிறது.

விருதாச்சலத்தில் 64 மடங்கள் இருந்ததாக கூறுவர். அவற்றில் ஒன்று ஆயிர வைசியர் மடம். ஆனால் இந்த மடம் தற்போது இல்லை. பரியாரிகள் மடம் என்ற மருத்துவர் மடமும் இருந்துள்ளது. இதுபோன்ற மழைய மடங்கள் தற்பொழுது காணப்படவில்லை. புதிய மடங்கள் சில இன்றும் நல்ல நிலையில் இவ்வூரில் பராமரிக்கப்படுகின்றன. படித்துறையில் காணப்படும் கல்வெட்டு 11 வரிகள் கொண்டது. நன்கு பளபளப்பாக்கிய கருங்கல்லில் வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு உள்ள இடத்திலேயே திருவுருவச் சிற்பங்களை அமைத்துள்ளனர். இரண்டு பக்கமும் எதிரெதிராக மண்டபம் அமைத்து அதில் உருவச் சிற்பங்களைக் கல்லில் செதுக்கி வைத்துள்ளனர். படித்துறையில் காணப்படும் கல்வெட்டு, சிற்பங்கள் இவை அனைத்தும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியைச் சார்ந்தவை ஆகும்.

1. ஸ்ரீ பிரும தேவன் வயசு நூறில்ப் பூறுவா அற்சாம பறன் மதகற்பம் என்று சொல்லப்பட்ட அன்பது வயசும் சென்று உபரி

2. சுவேதவராக கர்பத்தில் அன்பத்தோராம் வயதில் முதல் ஷு முதல் மாதம் முதல்த்தேதி ரெண்டாம் சாமம் மூன்றாம் முகுர்த்ததில் ஆறு மனு

3. ராச்சிய பாரம் பண்ணி ஏழாமனுவாகிய வைவசுவத்மநு ராச்சிய பாரம் பண்ணுகிற காலத்தில் இருவத் தெட்டான் சதுர்யுகத்தில்

4. வர்த்தமான கலியுகத்தில் சென்ற வருஷம் நாலாயிரத்து எண்ணூற்று பதினஞ்சு சுவத்தி ஸ்ரீ சாலிய வாகன சகாப்தம் ஷு ஆயிரத்து

5. அறுநூற்று முப்பத்தாறு இதன்மேல் செல்லானெனச்செ செய ஷு (வருஷம்) அற்பிசி மாதம் பழமலை நாதர் பெரிய நாயகி அம்மை

6. கிருபையினாலே மணிமுத்தா நதிப் படித்துறை கட்டி நிறைவேற்றின பேர் சென்னபட்டனம் ஆயிரவர்
7. நகரத்தாரில் பெரிய நதி மகாரிஷி கோத்திரம் ராகுவ செட்டியார் குமாரர் திருவிளப்ப செட்டி
8. யார் அவருடைய குமாரர்த் தியாகப்ப செட்டியார் அவருடைய குமாரர் தியாகம் வெங்கிட்டி செட்டி
9. யார் அவர்தம்பி காளத்தி செட்டியார்த் திரவியம் குடுக்க கட்டுவிச்சது ஒலகமாதேவி புரத்தார் வகையில் செட்டியப்ப
10. ஞானியார் இந்த சிலாசாதனம் பூலோகத்திலே சந்திராதித் தவர் உள்ளவரைக்கும் பேர் நிற்கத்தக்கதாக எழுதிய
11. சிலாசாதனம் ஆயிரவர் மடம் அருணாசலப் பண்டாரம் சகல காரியமும் பார்த்தவர்.

---

* பழைய கல்வெட்டுகளில் முதுகுன்ற முடையார் என்றே இவ்விறைவன் குறிக்கப்படுகிறார். (ப.ஆர்)

## ஜம்பையில் மூத்தோள் சிற்பம்

சிதம்பரம் தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தந்த தகவலின் அடிப்படையில் இத்துறையின் கல்வெட்டுப் படியெடுப்பவர், திரு. ப. பூபாலன் அவர்கள் தென்னார்க்காடு மாவட்டம் ஜம்பையில், ஒரு மூத்த தேவியின் சிற்பத்தை ஆய்வு செய்துள்ளார். தேவி வழக்கமாக அமர்ந்த நிலையில், நிறைந்த அணிகலன்களுடன், தலையில் கிரீட மகுடம் புனைந்து வலக்கையில் அல்லிமலரும், இடக்கையை தொடை மீது ஊன்றிய நிலையிலும் காட்சி தருகிறாள். வலப்புறம் நந்தி தேவன் வலக்கையில் மழு ஏந்தியிருக்க, இடப்புறம் மாந்தி நிற்குமாறு வடிக்கப்பட்டுள்ளாள். வலப்புறம் மேலே காக்கைக் கொடி உள்ளது. அதன் கீழே, நந்திதேவன் தலைக்கு மேலே நான்கு வரிகளில், 'ஸ்வஸ்திஸ்ரீ ஆச்சன் தன்மம்' என்று இச்சிலையினை வழிபாட்டுக்கு வடித்துக் கொடுத்தோரைப் பற்றிய குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளது.

இச்சிலை காணப்படும் இடத்திற்கு மிக அருகிலேயே பாறையில் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனான கன்னர தேவனின் கல்வெட்டும் உள்ளது. இச்சிலையும் அவனது காலத்தைச் (கி. பி. 956) சார்ந்ததே ஆகும்.

# கருவிளங்காட்டில் சப்த மாதர் சிற்பங்கள்

5

தி. சுப்பிரமணியன்
தொல்லியல் அலுவலர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், வட்டத்தில் உள்ள கருவிளங்காட்டில் சப்தமாதர் சிற்பக் குழுவில் நான்கு சிற்பங்கள் மட்டும் உள்ளன. வைஷ்ணவி, கௌமாரி, பிராமி, மகேஸ்வரி ஆகிய சிற்பங்கள் மட்டும் உள்ளன. இவை 3½ அடி உயர முடையனவாகும்.

**கௌமாரி**

கரண்ட மகுடமும், கண்ணிமாலையுடன் தலைஅலங்காரமாகக் காணப்படுகின்றது. கண்ணிமாலை தடித்தும், பட்டையாகவும் உள்ளது. நான்கு கரங்களில் தொடைமீது ஒரு கையும், அபய முத்திரையுடன் ஒரு கையும் உள்ளது. பின்னிரு கைகள் வஜ்ரம், சக்திப்படையுடன் உள்ளன. சன்னவீரம் தடித்தும் மார்புக்கச்சை பட்டையாகவும் காணப்படுகின்றன கௌமாரியின் ஆடை, அணிகலன்கள் பல்லவர் காலச் சிற்பக்கலையை ஒத்துக் காணப்படுகின்றன.

**வைஷ்ணவி**

அமர்ந்த நிலையில் காணப்படும் வைஷ்ணவியின் தலையில் நீண்ட கிரீடமகுடமும் கழுத்தில் அணிகலன்களும் காணப்படு கின்றன. மார்புக்கச்சையும் ஆடைகளும் தடித்த நிலையில் காட்டப்பட்டுள்ளன. நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் சங்கும், சக்கரமும், முன்னிரு கரங்களில் அபயமும், தொடை மேல் ஒரு கையும் காட்டப்பட்டுள்ளன.

**பிராமி**

கரண்ட மகுடத்துடனும், மூன்று முகங்களுடனும் பிராமி காட்சி யளிக்கின்றாள். நான்கு கரங்கள் உள்ளன. இவற்றில் தொடை மேல் ஒரு கையும், அபயமுத்தரையுடன் ஒரு கையும், கமண்டலம்,

அக்கமாலை ஆகியவற்றை ஏந்திய நிலையில் இரண்டு கரங்களும் உள்ளன. முப்புரிநூல் தடித்த நிலையிலும் கைகளின் மேலும் காட்டப் பட்டுள்ளது. இடையிலுள்ள ஆடைகளும், மார்புக்கச்சையும் குறிப்பிடத்தக்கன.

**மகேஸ்வரி**

அமர்ந்த நிலையிலுள்ள மகேஸ்வரியின் தலையில் கரண்ட மகுடம் காணப்படுகின்றது. நான்கு கரங்களில் தொடைமேல் ஒரு கையும், அபய முத்திரையுடன் ஒரு கையும் உள்ளன. கழுத்தில் அணிகலங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. முப்புரிநூல் தடித்ததாகவும் கையின் மேலும் காட்டப்பட்டுள்ளது. மார்புக்கச்சை, ஆடைகள் பல்லவர் காலச் சிற்பக்கலையின் சாயல் காணப்படுகின்றது.

சப்தமாதர்களின் சிற்பங்கள் ஒரே கல்லில் வடிக்கப் பட்டுள்ளன. ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ள சப்தமாதர் சிற்பங்கள் காலத்தால் முற்பட்டவை. ஒரே கல்லில் வடிக்கப்பட்ட பல்லவர் காலத்திய சிற்பங்கள் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இச் சிற்பங்களின் உருவ அமைதியைக் கொண்டு இவை பிற்கால சோழர்களின் முற்பகுதியில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்டவை என்று கூறலாம்.

## தனியார் சேகரிப்பில் சில அரிய காசுகள்

விழுப்புரம் மாவட்டம், வானூர் அருகேயுள்ள கரசனூரில் ஆசிரியர் திரு. சண்முகம் அவர்களிடம் இருந்த காசுகளைத் தொல்லியல் அலுவலர், திரு. ச, கிருஷ்ணமூர்த்தி ஆய்வு செய்ததில், திருக்கோவலூரைத் தலைமை யிடமாகக் கொண்டு ஆண்ட மலையமான் வெளியிட்ட சங்க காலக் காசு ஒன்று இருப்பது அறியப்பட்டது. காசின் முன்புறம் வலப்பக்கம் நோக்கிக் கம்பீரமாக நிற்கும் குதிரை உருவமும், பின்புறம் ஆற்றைக் குறிக்கும் கோடுகளும் உள்ள இக்காசின் எடை 16.3 கிராம் ஆகும். மேலும் மதுரை விஸ்வநாத நாயக்கன் தன் பெயரை ஸ்ரீ, விஸ்வ, நாத, ன் என்று நான்கு வரிகளில் தமிழில் எழுதி வெளியிட்ட மற்றொரு காசும், 'சந்தா சாகிப்' என்றும், 'நவாபு' என்றும் எழுதப் பட்ட காசுகளும் அச்சேகரிப்பில் இருந்தது அறியப்பட்டது.

# தரங்கம்பாடிப் பகுதியில் கண்டறியப்பட்ட தொல்லியல் தரவுகள்

6

கா. நெடுஞ்செழியன்
காப்பாட்சியர்

### கி.பி. 16-ஆம் நூற்றாண்டு நவநீதகிருஷ்ணன் சுடுமண் உருவம்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம் தலச்சங்காடு என்ற கிராமத்தில் பூமியில் கிடைத்ததாகத் தனியார் ஒருவரிடமிருந்து நவநீதகிருஷ்ணன் சுடுமண் உருவம் பெறப்பட்டது. இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும். நவநீத கிருஷ்ணனின் தலைப்பகுதி மட்டுமே உள்ளது. தலையின் பின்புறம் இடதுபுறத்தில் கொண்டை காணப்படுகிறது. நெற்றி வலப்புறம் சிதைந்து காணப் படுகிறது. புன்னகை தவழும் உதடு, நேர்த்தியான முகம், தலையின் பின்புறத்தில் கொண்டைப்பகுதி போன்ற அமைப்புகளைக் கொண்டு இது தவழும் கண்ணனின் உருவம் என்று ஊகிக்கலாம். தற்போது இச்சுடுமண் உருவம் தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

### சீனதேசத்து ஜாடி

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தரங்கம்பாடியிலிருந்து வடக்கே சீர்காழி செல்லும் சாலையில் நடராஜப்பிள்ளை சாவடி என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் வசித்துவரும் திரு. குணசேகரன் என்பவரிடமிருந்து கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனதேசத்து ஜாடி ஒன்று காப்பாட்சியரால் சேகரிக்கப்பட்டது, இந்த பீங்கான் ஜாடியின் உயரம் 41 செ.மீ. சுற்றளவு 82செ.மீ. கைப்பிடியின் அளவு 22செ.மீ. 8 செ.மீ, அளவில் ஜாடியின் வாய்ப்பகுதி குவிந்து காணப்படுகிறது. தற்போது தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. தரங்கம்பாடியில் ஏற்கனவே பீங்கான் தட்டுகள் சேகக்ரிகப்பட்டுள்ளன, தற்போது பீங்கான் ஜாடி தரங்கம்பாடியில் சேகரிக்கப்பட்டு பூம்புகார் ஆழ்கடல் அகழ்வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

### அலங்கரிக்கப்பட்ட சங்குகள்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த இரகுநாத நாயக்கர் 1620-ஆம் ஆண்டு டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியனுடன் செய்து கொண்ட வணிக ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியில் கோட்டை மற்றும் மாளிகைகள் அமைத்துத் தங்கித் தரங்கம்பாடி கடற்கரையில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தினை டேனிஷார் செய்து வந்தனர். 250 ஆண்டுகள் தரங்கம்பாடி டேனிஷ் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. மேலை நாட்டுக் கடற்கரையில் கிடைத்த சங்குகளை வழவழப்பாக்கிமலர் போன்று வேலைப்பாடுகள் செய்து தரங்கம்பாடியில் அவர்கள் கட்டிய மாளிகைகளில் அலங்காரப் பொருட்களாக வைத்திருந்தனர்.

அத்தகைய அலங்கரிக்கப்பட்ட இரண்டு சங்குகளைப் பொறையார் திரு. ஏ. பி. வெள்ளையன் என்பவர் இத்துறைக்கு இலவசமாக அளித்தார். சங்கின் சுற்றளவு 49 செ. மீ. நீளம் 20 செ. மீ. ஆகும். சங்கின் மையப்பகுதி மலர் போன்று அலங்கரிக்கப்பட்டு வழவழப்பாக மிகவும் நேர்த்தியாக அழகு செய்யப்பட்டுள்ளது. சங்கின் மையப்பகுதியின் மேற்புறத்தில் 90 'DOTTBAR' என்று எழுதப்பட்டுள்ளது.

மற்றொரு சங்கின் சுற்றளவு 49 செ.மீ. நீளம், 20 செ.மீ. அளவுகளை கொண்டது. கலை அம்சம் கொண்ட இச்சங்குகள் பூம்புகார் ஆழ்கடல் அகழ் வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

## பொறையாரில் அலங்கரிக்கப்பட்ட இரும்பு விளக்குத் தூண்

அலங்கரிக்கப்பட்ட டேனிஷ் கால இரும்பிலான விளக்குத் தூண் ஒன்று பொறையார் உயர்நிலைப் பள்ளித் தெருவில் திரு. கோபால் நாயுடு இல்லத்திற்கு எதிர்புரத்தில் உள்ளது. டேனிஷ் காலத்தில் தூணின் மேற்புரத்தில் விளக்கைப் பொருத்தி வெளிச்சத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்தூணின் உயரம் சுமார் 15 அடியாகும். தூணின் அடிப்பகுதி வட்டவடிவில் அகன்று 6 பட்டைகள் கொண்டு வடிக்கப்பட்டுள்ளது. மேற்புரம் கலச வடிவிலும், அதன்மேல் வட்ட வடிவில் 10 பட்டைகள் கொண்டும், இதன் மேல் மட்டம் (TOP PORTION) அகன்று மலர் வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதியிலிருந்துதான் விளக்கு தொங்கவிடப்படும். இன்றும் இவ்விளக்குத் தூண் நினைவுச் சின்னமாகத் திரு. கோபால் நாயுடு குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### தர்காவும் பள்ளிவாசலும் :

தரங்கம்பாடி பள்ளிவாசல் தெருவில் தர்கா ஒன்றும், இரண்டு பள்ளி வாசல்களும் உள்ளன.

### தர்கா

தர்கா செய்து இஸ்மாயில் ஒளியுல்லா, செய்யது சாகிப் ஒளியுல்லா, பாவா பக்ருதீன் ஆகியோர் சமாதி ஆன இடமாகும். இவர்கள் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் அரேபியாவிலிருந்து பயணம் செய்து கடலில் சமாதியடைந்து தரங்கம்பாடி கடற்கரையில் ஒதுங்கியதாகச் செவி வழிச் செய்தி மூலம் அறிய முடிகிறது. இத்தர்கா டேனிஷ் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

### கல்வெட்டு ;

பின்புறச்சுவற்றில் 1863-ஆம் ஆண்டு மாசி மாதம் 30-ஆம் தேதி பொறிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டொன்று காணப்படுகிறது. அப்பாவு செட்டி துணைவியார் பெரியனாயகம் செய்யது மசூதிக்குத் திருப்பணி செய்ததாக இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது,

1. சுது-அாசாயிரு
2. ஸ்ரீமாசிமீ கூ்உ

3. அப்பாவுசெட்டி
4, பெண்சாதி பெ
5. ரியனாயகம்
6. செயிது ம
7. சு(திக்கு) மாரிமுத்து ஆ
8. சாரி முன்
9. னோர் தன்மம்

என்று கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு 1863-இல் செய்யது மசூதி என்ற மசூதி இருந்ததையும் அதற்குச் செட்டியார், ஆசாரி இனமக்கள் செய்த தர்மத்தையும் குறிக்கிறது. டேனிஷ் வருகைக்கு முன்பே இவ்வூரில் ஒரு பள்ளி வாசல் இருந்தது என செர்சூட் கடிதம் ஒன்று குறிக்கின்றது. இங்குக் குறிக்கப்படும் மசூதி அதுவாகலரம்.

## பொறையார் விசுவநாதசுவாமி கோயில் மராட்டியர் ஓவியங்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள ஊர் பொறையார். இவ்வூரில் விசுவநாதசுவாமி என்ற சிவன் கோவில் உள்ளது. அக் கோயிலில் திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது, வசந்தமண்டபம். இம்மண்டபத்தைச் செங்கற்களால் கட்டப்பட்ட ஆறு பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. கோயில் விழாக்காலங்களில் இம்மண்டபத்தில் சுவாமி அலங்காரம் செய்யப்பட்டுப் புறப்பாடு நடைபெறும். இம்மண்டபத்தில் கி.பி, 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டியர் கால ஓவியங்கள் இருப்பது கண்டறியப் பட்டது. தூண்களுக்கு மேல் நான்கு புறங்களிலும் மற்றும் விதானப்பகுதிகளிலும் இவ்வோவியங்கள் உள்ளன, இவ்வோவியங்கள் நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சை போன்ற நிறங்கள் கொண்டு வரையப்பட்டுள்ளன. விதானத்தின் மையப்பகுதியில் விரிந்து மலர்ந்த தாமரையும் மேலும் வலது இடதுபுறங்களில் இரண்டு தாமரை மலர்களும் தீட்டப்பட்டுள்ளன, மேற்குப்புறத்தில் தூணிற்கு மேல் மையப்பகுதிகளில் இரண்டு நடனமாடும் பெண்கள், இறக்கைகளுடன் நின்ற நிலையில் இரண்டு பெண்கள், ஒரு பூந்தொட்டியில் மலர்களுடன் கூடிய ஒரு செடியில் யாளிமுகத் துடன் கூடிய இரண்டு பறவைகள், வீணையைப் பிடித்த நிலையில் இறக்கைகளுடன் ஒரு பெண் ஆகிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் வலப் புறத்திலும் இரண்டு நடன பெண்கள் உள்ளனர், இடதுபுறத்தில் மரங்களுடன் இயற்கைக் காட்சி வரையப்பட்டுள்ளது, மரங்களில் நான்கு பச்சைக்கிளிகள் அமர்ந் துள்ள காட்சி இயற்கையாக வடிக்கப்பட்டுள்ளது, அடுத்து ஒரு பெண். கிழக்குத் திசையிலும் இயற்கை காட்சி வரையப்பட்டுள்ளது, மரத்தில் ஆந்தைகள் அமர்ந்து உள்ளன. வடக்குத்திசையில் கஜலெட்சுமியும், வலது இடதுபுறங்களில் கஜலெட்சுமிக்கு வெண்சாமரம் வீசும் இரண்டு பணிப்பெண்களும், மேலும் இரண்டு பெண்களும் காணப்படுகின்றனர். தெற்குப்புறத்தில் வடக்கில் உள்ள ஓவியங்களே மீண்டும் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் மராட்டியர் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

தஞ்சையை ஆண்ட இரகுநாதநாயக்கர், டேனிஷ் அரசர் நான்காம் கிருஸ்டியன் ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியில் வாணிபம் செய்ய டேனிஷார் ஆண்டிற்கு 3111ரூ வரியாக நாயக்க மன்னர்களுக்கு செலுத்த வேண்டும், அதன்படி தஞ்சையை ஆண்ட மராட்டியர்களுக்கும் டேனிஷார் இத்தொகையை செலுத்தி வந்தனர், மராட்டியர்கள் தஞ்சை அரண்மனையில் ஓவியங்கள் தீட்டியது போலவே தரங்கம்பாடி அருகிலுள்ள பொறையார் கோயிலிலும் வடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்,

8-ம் பக்கத் தொடர்ச்சி

**நாங்குநேரி வட்டம்**

1. சிறு பழஞ்சி - அய்யனார் கோயில் திடல்

**சங்கரன் கோயில் வட்டம்**

1. அய்யநேரி - பிள்ளையார் கோயில் திடல்

**புதையல்கள்**

திருச்செந்தூர் வட்டம், நங்கைமொழி அடைக்கலாபுரத்தில் நத்தப்பகுதியில் தனியார்க்குரிய தென்னந்தோப்பில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் சிலைகள் கிடைத்துள்ளன எனக் கூறப்படுகிறது. அரசு வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டது எனத் தெரிகிறது. கோயில் ஒன்றின் பகுதிகளும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. நந்தி கற்சிலை ஒன்றும், கி.பி. 13ஆம் நூற்றாண்டைய கல்வெட்டுப் பகுதியும் காணப்படுகின்றன. விளாத்திகுளம் வட்டம் அளகாபுரி நத்தக்காட்டில் 5 ஆண்டுகட்கு முன்னர் சிலைகள் கிடைத்துள்ளதாக வெம்பூர்த் தலையாரி தெரிவித்தார். காவல்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

**பிற கண்டு பிடிப்புகள்**

1. ஒட்டப்பிடாரம் வட்டம் - முரம்மன், சங்கம்பட்டி, கொத்தாளி ஆகிய இடங்களில் 16-ஆம் நூற்றாண்டைய நடுகற்கள்
2. திருவைகுண்டம் வட்டம், மேல செக்காரக்குடியில் 16-ஆம் நூற்றாண்டைய நடுகல்
3. ஒட்டப்பிடாரம் வட்டம் மேலமங்கலத்தில் 13-ஆம் நூற்றாண்டைய சிவன் கோயில். கீழமங்கலத்தில் 12-ஆம் நூற்றாண்டைய சடையவர்மன் குலசேகரபாண்டியன் கல்வெட்டு
4. திருச்செந்தூர் வட்டம் மணத்தி குட்டித்தோட்டம் என்ற பகுதியில் 13-ஆம் நூற்றாண்டைய சிவன் கோயில் கல்வெட்டுகளுடன் (இக் கோயில் நவகைலாயங்களில் ஒன்றெனத் தெரிகிறது)

தொகுப்பும் தகவலும்

**எஸ். இராமச்சந்திரன்,**
கல்வெட்டாய்வாளர்

# 7

# கன்னியாகுமரிப் பகுதியில் புதிய கல்வெட்டுகள்

**தே. கோபாலன்**
தொல்லியல் அலுவலர்

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சரலூர் கிராமத்தில் இந்துக்கல்லூரி அருகே உள்ள மாடன் கோயிலொன்றுக்கு முன்புறமுள்ள படிக்கல்லில் கி.பி. 1697-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று பொறிக்கப் பட்டுள்ளது. 41 வரிகளில் தமிழில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

வேணாட்டரசன் ராமவடியர் முதலாம் சிறைவாய் மூத்த தம்பிரான் காலத்தினைச் சேர்ந்த 17-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும். வேணாட்டரச ருக்கும் அய்யப் பெரும் பெரியன் குலசேகர நாடான் என்பவருக்கும் இடையிலான பிணைப்பு ஒப்பந்தத்தினை இக்கல்வெட்டு பதிவு செய்துள்ளது. குலசேகர நாடான் தனக்குரிமைப்பட்ட ஊரையும், நிலங்களையும் இறைக்கடமையும் (வரி) ராம வடியர் சிறைவாய் மூத்த தம்பிரானுக்குக் கொடுத்து அதற்குப் பதிலாக கரைப் பணம் என்கிற ஜென்ம காணிக்குரிய பணம், முத்துக்களால் கோர்க்கப்பட்ட சரமாலை ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தத்தினை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது.

நாகர்கோவில் நில அளவைத் துறையினைச் சேர்ந்த திரு. செல்வின் என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் கொற்கை காப்பாட்சியர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்களுடன் இணைந்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. பார்வைப்படி எடுத்து படிக்கப்பட்டது.

## அகஸ்தீஸ்வரம் வட்டம் மயிலாடிக்கு அருகிலுள்ள குலசேகரபுரத்தில் உள்ள சுமைதாங்கிக் கல்வெட்டு

1) ஸாாக
2) ௵ அல்ப்
3) பசி மாசம்
4) உடிக தெய
5) தி செவ்வா
6) ய்கிளமை
7) ராம சுவா
8) மி நாடார்
9) மகள் பாறுவ

10) தி நாடா
11) ச்சி வக
12) கன்னங்
13) குளம்

## குரத்தியறை பாறைக் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கி யாண்டு
2) ௰௧ இவ்யாண்டு நாஞ்சி நாட்டு முன்
3) னூரிரவி நியமது வண்டுற வீற்றிருந்த
4) ருளின எம்பெருமாற்கு இவ்வூர் குன்றப்பள்ளி
5) இப்பிக் கவிசியன் சாத்தஞ் சிராவ
6) [ணன்] . ம . மாடுது கல்லால் வைத்த
7) [பொன்] . . . . . . . . . . . . . .
8) மரிவ் வண்டுறைதவன்
9) ஏற்றின இறை ௯ பொன்
10) குன்றப்பள்ளி இப்பிக் கவிச்செயன் சாத்
11) தன் நிறை கல்லால் நியமத்துக்கு நிறுத்த குளி[கை]
12) பொன் இவ்வூருடை ஸ்ரீ வைஸ்ரவணன் கையி
13) லருப்பணிச்சு விட்டது

## திப்பிறமலை ஸ்ரீகிருஷ்ணன் கோவில் பலிபீடக் கல்வட்டு

இக்கல்வெட்டு தமிழ், வட்டெழுத்து மற்றும் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் ஊரின் பெயர் 'திருப்பிறைமலை' என்றும், கோயில் இறைவனின் பெயர் 'கருமாணிக்கத்தாழ்வார்' எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

விக்கிரமனனுக்கன் என்பவனும் அவனது தம்பிமாரும் கருமாணிக்கத்தாழ் வார்க்கு இரண்டு நந்தாவிளக்கு செய்தளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 8 எருமை களையும், தங்களுக்கு உடமைப்பட்ட இரண்டு தோப்புகள் உள்ளிட்ட நிலங்கள் சிலவற்றையும் புரவரி சபையாரிடம் கொடையாக வழங்கியதனை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரிநீக்கம் செய்யப்பட் டுள்ள குறிப்பும் இக்கல்வெட்டில் காணப்பெறுகிறது. விக்கிரமனனுக்கனும் அவனது தம்பிமாரும் இவற்றைத் தொடர்ந்து நடத்தி வரவேண்டுமென கல்வெட்டு தெரிவிக்கின்றது.

நந்தா விளக்கெரிப்பதில் தடையேற்பட்டால் அதற்குத் தெண்டமாக இரட்டிப்பு மடங்கு நெய் வழங்க வேண்டுமெனவும், வழங்கப்படுகின்ற கொடையில் தடையேற்பட்டால் அதற்கு காரணமானவர் 12 கழஞ்சு பொன் தெண்டமாகச் செலுத்த வேண்டும் என்ற எச்சரிக்கையும் இக்கல்வெட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள பலிபீடத்தினைச் செய்தளித்தவர் தேவநாராயணன் என கிரந்த எழுத்துக்களில் பலிபீடத்தின் கீழ்புறக் குமுதப் படையில் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டில் ஆண்டு குறிக்கப்பெறவில்லை. இது தொடர்பாக 'விரிச்சிகத் தில் வியாழன் நின்ற துலா ஞாயிறு முதல்' என்ற குறிப்பு மட்டும் காணப்பெறு கிறது. இக்கல்வெட்டு கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம்.

**கல்வெட்டின் வாசகம்**

1) ஸ்வஸ்திஸ்ரீ விரிச்சிகத்தில் வியா
2) ழ நின்ற துலா ஞாயிறு முதல் திருப்
3) பிறைமலை பெருந்திருக்கொவி
4) ல்க் கருமாணிக்கத்தாழ்வா
5) ர்க்கிரண்டு திருநந்தா
6) விளக்கு செலுத்துவான் கல்லின் மெ
7) ல் வெட்டினபடி இதினு புறத்தெ திருச்சுற்
8) றில் வெட்டிக்கின்ற எருமை ஏ[ழ்]ழாலு இ
9) வ[னேய்க்] கொண்டுவிட்ட வெருமை ஒ
10) ன்றினாலு பெருங்குண்ட
11) றையாலு துடவ லிரண்டினாலு தன் கரை பு
12) ரை விடங்களாலு கிழக்கின் தச்சனமலை ஆ
13) றொன்னாலு தன் சத்தி முகத்தில் பட்ட புரை
14) விடங்க ளனைத்துங் கொண்டு
15) திருநந்தா விளக்கிரண்டு செலு
16) த்துவது விக்கிறமனனுக்கனு தம்பிமாரு புரி
17) விரை மனத்தாளு திருநந்தா விளக்கிரண்டுக்கு தி
18) ங்கள் திருமடைப்பள்ளியில் பதினானாழி
19) ச்சை நெய்கொண்டு சங்கிராந்தி வ
20) ழி நம் வீரை நீலரையந் கொ

21) டுப்பிது விக்கிரமனணுக்கனு தம்பிமாரு இவ்
22) வற்கத்தார் இப்புன்னாடு ஸ்வாமிக்கு தெவர்க்கு வைப்பி
23) து இப்பூமி
24) விளக்கிரண்டு முட்டுகில் முட்டிரட்டி யளப்பிது இ
25) ப்பூமியு பு
26) ரைவிடத்தினு புனுப்ப முட்டி இவனொருளாகில் பந்திரு க
27) ழைஞ்சு பொன் தெண்டக்கு புரைவிடத்தி
28) னு விக்கிரமன
29) ணுககன் தம்பிமா
30) ரை இறைவொழி
31) ஞ
32) புரவரி
33) ஸபையொ[ம்]

பலிபீடத்தின் கீழ்புற குமுதபடையில்

1) ஸ்வஸ்திஸ்ரீ தெவநா
2) ராயணந் பிரதிஷ்டை

மறுபக்கம்

1) விர கெராழ வற்ம்மர்
2) சிறவா மூத்த தம்பிரான்
3) கப்பினைப்படி குலசெ
4) கர னாடானென்று செ
5) பரும் குடுத்து கூ பாத்தி
6) றயமும் கொளு வெ
7) த்திலையும் சமத்த பிராத்தி
8) யும் கரைபணமும் க
9) ப்பினைபடி வாங்கிக்
10) கொள்ளுமாறும்
11) இப்படிக்கு கற்பினை [ஓப்]
12) பம்படி கல்லு வெ
13) ட்டி நாட்டி குடுத்த வ
14) ரிசையாவிது இயி

15) துக்கு அகிதம் பண்
16) னினவன் கெங்கை
17) கக் கரையில் காராம்
18) பசுவை கொன்ன ப
19) ாவம் கெட்டிக் கொள்
20) வாராகவும் இதுக்கு
21) ஆத்தம் செத
22) வன் ஆகினபடுவாரா
23) கவும்

### அவுலியாமடக் கல்வெட்டு

மடத்தில், தண்ணீர் அளிக்கும் தன்மம் செய்யும் பணியினைத் தொடர்ந்து செய்வதற்கு அளித்த நிலக்கொடையை தூணில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு பதிவு செய்கிறது. மடத்தினை அம்பலம் என்று கல்வெட்டு குறிக்கிறது. உரிய கடமையினையும், இந்நில வருவாயிலிருந்து செலுத்துதல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

**கல்தூணின் தென்புறம்**

1) இந்நு தன்மெத் தண்
2) ணீரும் ஊத்தி தன்மம
3) மும் பேணி யிரிக்கி
4) ன்றவற்க்கு இ யாப்பி
5) யத்தினு தானப்
6) பிறமாணமாக வி
7) ட்டுக் கொடுத்த நி
8) லமாயிது மேல்ப் ப
9) ரக்கோட்டு கிரா[ம]
10) ங் கோட்டு குள
11) த்தினது கீள்
12) மேய்ப்படியர்
13) விலை கொண்
14) டு இயாவிச்சு
15) போகுகிந்ந நில
16) ம் புளியறை கலித்து

17) சா பக்கு எல்கை
18) கிழக்கு மடமும் புளி
19) யறைக்கு மேக்கு தெக்கு
20) தேவதானத்துக்கு
21) வடக்கு மேக்கு நீரோ
22) டும் வாய்க்காலு
23) க்கு கிழக்கு வடக்கு [கு]
24) ளத்தடியள்க்கு தெ
25) க்கு ஆக இவிசை ந
26) — 36)

கல்தூணின் வடபுறம்

1) ஆக [ப]சலி உனால்
2) உயகபக்கு ஷ க
3) க்கு கடமை நெல் சுள
4) சுபயும் பூத்தொறு
5) ம் ஆண்டு வரை
6) [யிலு]ம் சீ பண்டார
7) த்தில் நின்றும் குறியு
8) ம் பிடிச்சு கடமை
9) யும் அளந்து இன்
10) னிலம் யகப யும் தா
11) னப் பிறமாணமாக
12) இயாவிச்சு கொ
13) ண்டதி அம்பலத்
14) தில் நாங்கெல்
15) கைக்குள் அக
16) ப்பட்ட கறையு
17) ம் பல விற்த்தங்
18) நளும் கூடி தா
19) னமாக ஆசெந்தி
20) ராத்த வெலை
21) இந்த நிலம் . . .

22) . . . . . . . . . . .
23) . . . . . தன்மம்

**கோட்டவிளை பாறைக் கல்வெட்டு**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், திருநயினார்குறிச்சிக்கு அருகே உள்ள கோட்டவிளை எனும் கிராமத்தில் ஒரு பாறையின் கீழ் 22 வரிகளில் தமிழில் பின்வரும் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

1) கொல்லம் 757 ஷூ
2) வைகாசி ௰௫ வ பள்ளிக்
3) கலில் நாக்கா மடத்துக்கு
4) நாராயணன் கண்ணான
5) திரையிலோக்கிய விழுபா
6) தரையர் அய்யன் குளமும்
7) கன்னகுளமும் அதின் கீள் நி
8) லமும் அவர் தன்மம் கல்ல
9) ரன் நாகன் தச்சண கெ
10) ரய [வர]வர் குடியில் தான்
11) விலை கொண்டு போதுகிற
12) பூதை சாத்தன் நிலம் தன்
13) மம் அவ்வெண்ணமே ச
14) ந்ததிப் பெறவேசமே நடத்
15) துமிடத்து இதுக்கு முடக்
16) கம் யுண்டாகில் கெங்கை
17) கரயில் காராம் பசுவை
18) யும் பிராமணனையும் கெ
19) கான்ற பாவம் கைய்
20) யேற்றுக் கொள்ளவும்
21) நாகன் பொன்னன்
22) செவ்விச்ச திருப்பணி

கொல்லம் 757-இல் (கி.பி. 1581) பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு பள்ளிக்கல்லினைச் சேர்ந்த நாராயணன் கண்ணனான திரைலோக்கிய விழுப்பா தரையன் அய்யன்குளம், கன்னகுளம், அதனால் நீர்பாயும் நிலங்கள், மற்றும் நாகன் குடியிடமிருந்து விலைக்கு வாங்கிய பூதை சாத்தன் நிலம் ஆகியவற்றை நாக்கா மடத்திற்குக் கொடை வழங்கியதனைக் குறிப்பிடுகிறது.

# 8 புதையலில் கிடைத்த ஐயனார்

**கோ முத்துசாமி**
கல்வெட்டாய்வாளர்

**நா**கை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் நீடூர் கிராமத்தில் உள்ளது அருள்மிகு சோமநாதர் திருக்கோயில். சமீபத்தில் இக் கோயில் திருப்பணிக் குழுவினர் திருப்பணி செய்வதற்காகக் கோயிலின் பிரகாரத்தை ஒட்டிய அடித்தளத்தைச் சீர் செய்யும் போது கோயிலில் கருவறையின் பின்புறம் பூமிக்கடியில் ஒன்றரை யடியாழத்தில் ஒரு ஐயனார் செப்புத் திருமேனி புதையலாகக் கிடைத்துள்ளது.

நீடூர் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த தகவலின் பேரில் மயிலாடுதுறை வட்டாட்சியர் திரு. இராமநாதன் அவர் களுடன் சென்று மேற்படி ஐயனார் செப்புத் திருமேனி ஆய்வு செய்யப்பட்டது.

செவ்வக பீடத்தின் மீது வலதுகாலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்து ஊன்றி அமர்ந்துள்ள நிலையில் ஐயனார் திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடம் அணிந்துள்ளார். மகுடத்தின் இருபுறமும் ஜடாபாரம் விரிந்து காணப்படுகிறது. அய்யனார், மோகினியாக வந்த திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் பிறந்தவர் என்பதைச் சித்தரிக்கும் வகையில் ஜடாபாரத்தின் இடதுபக்கம் பிறை காட்டப்பட்டுள்ளது. வலது பக்கம் விரிசடையில் சூரியன் காட்டப்பட்டுள்ளது. இரண்டு காது களிலும் பத்ர குண்டலம் அணிந்துள்ளார். தோளின் இருபக்கமும் பூச்சரம் அணிந்துள்ளார். கழுத்தில் இரண்டு ஆரங்களும் மார்பில் புரிநூலும் அழகூட்டுகின்றன. வயிற்றில் உதரபந்தம் கட்டப் பட்டுள்ளது. இடுப்பின் ஆடை தொடை வரை செல்கிறது. இடுப்புக்குக் கீழ்பக்கத்தில் உள்ள பீடத்தில் சிலையைப் பொருத்து வதற்கேற்றாற் போல் ஒரு துளை இடப்பட்டுள்ளது.

வலது கையில் சாட்டை வைத்துள்ளார். இடது கையை மடித்து அமர்ந்த இடது காலின் மீது வைத்து தொங்கவிட்ட நிலை. இரு கைகளின் புறத்திலும் வீர வளையம் அணிந்துள்ளார்.

சாட்டையில் நுனிக்கயிறு வளைவாகக் காட்டப்பட்டுள்ளது. கூர்மையான மூக்கும் நெற்றிப்பட்டமும் முகத்திற்கு எழிலூட்டுகின்றன. தலைமுடிக் கற்றை, கழுத்து ஆரம், மார்பு புரிநூல் இடுப்பின் ஆடை இவை முதுகின் பின்புறம் தெரிகின்றன.

மிக நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ள இத்திருமேனி பஞ்சலோக செப்புத் திருமேனியாகக் கருதப்படுகிறது.

திருமேனியின் அளவுகள் வருமாறு :-

வலது காலிலிருந்து முடிவரை உயரம் : 4 செ.மீ.

இருகை பெருவிரல் அகலம் : 8 செ.மீ.

சோழர் கலைப்பாணியில் அமைந்துள்ள இந்த அய்யனார் திருமேனியின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

## தீப்பாஞ்ச அம்மன்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், விண்ணவனூர் கழனிக் காட்டில் ஒரு பெண் சிற்பம் பொறித்த பலகைக் கல்லில், "ஸ்ரீ தீபாஞ்சா அம்மன் . . பிண்டு பால கோத்திரத்தார் கொல தெய்வம் விரோதி ஸு ௳ " என்ற கல்வெட்டுள்ளது. தீப்பாய்ந்த அம்மன் என்பது கணவன் இறந்த பின் உடன்கட்டை ஏறித் தன்னுயிர் மாய்த்துக் கொள்வோரைக் குறிக்கும். அப்படி இறந்த பெண்ணை அவர் வழியினர் குலதெய்வமாக வழிபட்டுள்ளனர். கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு கல்வெட்டு கி.பி. 1700ஐச் சேர்ந்தது எனலாம்.

# கல்வெட்டு இதழ்கள்

## 1974 முதல் 2003 வரை


சென்ற இதழின் தொடர்ச்சி

7. வெங்கடேசப் பெருமாள் கோயில்
ஒரு வரலாற்றுப் பார்வை
— செ. சாந்தலிங்கம் ... 33

துறையின் சிறப்பு நிகழ்ச்சிகள் - செய்தி
சிந்துவெளி எழுத்துக்களின் பொருள்

இதழ் - 34

1. தொண்டூர் தமிழ் - பிராமிக் கல்வெட்டு
— மா. சந்திரமூர்த்தி ... 1

புங்கனூர் ... 3

2. கொற்கையும் அயல் நாட்டுறவும்
— என். தியாகராஜன் ... 4

3. கங்கை கொண்ட சோழபுரம்
அகழ்வைப்பக கல்வெட்டுகள்
— கா. நெடுஞ்செழியன் ... 8

4. தளி - ஆய்வு அறிக்கை
— க. செல்வராஜ் ... 13

5. அச்சுத மங்கலம் கல்வெட்டுகள்
— ச. செங்கல்வராயன் ... 51

6. நாகொண்ட பாளையம்
— தி. சுப்பிரமணியன் ... 23

7. கரூர் வட்டத்தில் கள ஆய்வு
— இர. ஜெயராமன் ... 25

8. பேரூரில் அரிய சிற்பங்கள்
— இரா. ப. கருணானந்தன் ... 30

9. An Exquisite Bronze Image of Thiruvanaikka
— Natana. Kasinathan ... 34

## இதழ் - 35


1. சோழர் காலப் புதிய நாணயம்
   — நடன. காசிநாதன் ... 1
2. திருவண்ணாமலைச் செப்பேடு
   — கோ. முத்துச்சாமி ... 5

   திருப்பைஞ்ஞீலி ஏரிக்கல்வெட்டு
   — செய்தி ... 9
3. குழுவாணை நல்லூர்
   — சி. எம். கணபதி ... 11

   துறையின் அண்மைக்கால பணிகளும் கண்டுபிடிப்புகளும்
   — செய்தி ... 16
4. தமிழகத்தில் முருகன் வழிபாடு
   — நா. மார்க்சியகாந்தி ... 17
5. வஞ்சியும் பெருவஞ்சியும்
   — செ. இராசு ... 25

   எலவானாசூர்ப் பாடல் கல்வெட்டு
   — செய்தி ... 27
6. எங்கள் மாணவர்கள் ... 28
7. Delivery System in Ancient Tamilnadu
   — Natana. Kasinathan ... 34
8. ஜெயங்கொண்டம் புத்தர், மகாவீரர் சிற்பங்கள்
   — கா. நெடுஞ்செழியன் ... 37


## இதழ் - 36


1. பழனிச் செப்பேடு
   — சு. இராசகோபால் ... 1
2. Temples for the Sun God
   — Natana. Kasinathan ... 4
3. கரூர் முத்திரை மோதிரங்கள்
   குு. தாமோதரன் ... 9
4. பெருமுக்கல் - ஓர் ஆய்வு
   — ஆர். வசந்தகல்யாணி ... 10
5. கண்ணீசுரமுடையார் கோயில், வீரபாண்டி
   — கா. நெடுஞ்செழியன் ... 18

6. கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தின்
புதிய காட்சிப் பொருள்கள்
— கா. நெடுஞ்செழியன் ... 21

7. நயினார் தனிமாலையழகியார்
— தே. கோபாலன் ... 26

8. கோத்தகிரி வட்டத்தில் ஒரு கள ஆய்வு
— இரா. ஜெகதீசன் ... 31

9. திருமலை நாயக்கரின் சித்தரேவுச் செப்பேடு
— மா. சந்திரமூர்த்தி ... 35

## இதழ் - 37

1. Address delivered at the Conference of the Epigraphical Society of India held at Trichy on 12-2-1993
— Natana. Kasinathan ... 1

2. ஈஞ்சார், ஆலடி ஈசுவரர் கோயில் ஓவியங்கள்
— சீ. நளாயினி ... 6

3. பாண்டிய நாட்டுப் பழங்குடி ஆயுதம் — வளரி
— மீ. மனோகரன் ... 12

4. Easalam Copper Plates of Rajendra Chola-I
— Natana. Kasinathan ... 20

5. அழகன்குள அகழாய்வில் கிடைத்த சங்ககாலப் பாண்டியரின் அரிய காசு
— நடன. காசிநாதன் ... 37

## இதழ் - 38

1. Submerged Land of Tamilagam
— Natana. Kasinathan ... 1

2. Easalam Copper Plates of Rajendra Chola-I
— Natana. Kasinathan ... 9

3. பெரிய பட்டினம்
— புலவர் செ. இராசு ... 23

4. சோழமாதேவி திருக்கைலாயமுடையார் கோயில் அமைப்பு முறை
— ஸ்தபதி வே. இராமன் ... 20

5. தளிஞ்சி - கள ஆய்வு
— வெ. வேதாசலம் ... 37

**இதழ் : 39**

1. பிற்காலச் சோழர் ஆட்சியில் நில அளவை முறை
   — கு. வேங்கடாசலம் ... 1
2. The 'Parumakas' of the Sri Lankan Brahmi Inscriptions
   — S. K. Sitrampalam ... 19
3. திருக்கோவலூர் அகழாய்வு
   — நடன. காசிநாதன், அ. அப்துல் மஜீத் ... 31

**இதழ் - 40**

1. Key note address Delivered in the inagural function of the seminar on Nagai - Quide Millad district
   — Natana. Kasinathan ... 1
2. வீரபாண்டியன் காசுகள்
   — ஆர். வசந்தகல்யாணி ... 9
3. அழகன்குளம் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
   — சி. வசந்தி ... 14
4. Vaippar River Course - A New Avenue For Prehistory
   — K.S. Sampath, S. Sreekumar ... 22
5. திருவூர்த் திருக்கோயில்
   — வ. குமாரராஜா ... 22
6. தேவனூர் கல்வெட்டுத் தூண்
   — முத்து. எத்திராசன் ... 16
7. முகாசப்பரூர்
   — கிருஷ்ணமூர்த்தி ... 28
8. குழாய்களும், வடிகால்களும்
   — சி. வசந்தி

**இதழ் - 41**

1. நாழி வழி மைல் கல்
   — கி. ஸ்ரீதரன் ... 1
2. தொல் பழங்காலத்தில் சமயநிலை
   — து. துளசிராமன் ... 4
3. பிற்காலப் பாண்டியர் காலத்தில் சிற்பக் கலை
   — செந்தில் செல்வகுமரன் ... 10

4. Uvaver - A ancient technical term
— N. Marxia Gandhi ... 19

5. தென்குமரியில் பிற்காலப் பாண்டியர்கள்
— எஸ். பத்மநாபன் ... 24

6. Somur Inscription of Rajaraja - I
— S. Swaminathan ... 34

இதழ் - 42

1. பாண்டிய நாட்டு நடுகற்களும் பிற நடுகற்களும்
— தி. சுப்பிரமணியன் ... 1

2. வருச நாட்டுப் பகுதியில் வரலாற்று ஆய்வுகள்
— நா. சுலைமான் ... 7

3. பாண்டிய நாட்டில் இசுலாமியர்
— எஸ். எம். கமால் ... 10

4. தாருகாபுரம் செப்பேடு
— சொ. சந்திரவாணன் ... 18

5. தமிழக நுண்கலை வரலாற்றில் நகரத்தார் பங்கு
— நா. வள்ளி ... 25

6. அதிஷ்டானம் : கட்டுமான வடிவமைப்பு
பல்லவர் கலைப்பாணி - ஓர் ஆய்வு
— வே. இராமன் .. 30

7. A 14th Century - Vijayanagar Bronze from Padi
— M. Chandramoorthi ... 36

இதழ் - 43

1. விழுப்புரத்தில் அரிய பைரவர் சிற்பம்
— கோ. அர்ச்சுனன் ... 1

2. மங்கை மடம் - ஓர் ஆய்வு
— கோ. முத்துச்சாமி ... 4

3. A rare sculpture from Ponnur
— Natana. Kasinathan ... 9

4. Ancient rock paintings at Thirumalai
— S. Kannan ... 13

5. அழகன் குளமும் அயல் நாட்டுறவும்
— அ. அப்துல் மஜீத் ... 18

6. மங்களேசுவரி நாச்சியாரும் மகர தோரணமும்
— அர. வசந்தகல்யாணி ... 23

7. ஆமன் னும் கிணறு
— வெ. வேதாசலம் ... 30

8. நாகூர் தர்காக் கல்வெட்டு - சில குறிப்புகள்
— செ. இராசு ... 34

**இதழ் - 44**

1. இராசேந்திரன் காலக் கட்டடக் கலை
— நடன. காசிநாதன் ... 1

2. வரலாற்றுக்கு முற்பட்ட நாகை காயிதேமில்லத் மாவட்டம்
— கே. எஸ். சம்பத் ... 10

3. தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியின் தோற்றம்
— ஆ. பத்மாவதி ... 17

4. நாகையும் பௌத்தமும்
— தே. கோபாலன் ... 25

5. குலோத்துங்கன் காலத்தில் பிச்சை எடுத்துக் கட்டிய கோயிலும் அதன் கல்வெட்டுகளும்
— செ. போசு ... 36

**இதழ் - 45**

1. கருவூர் வாங்கல் கிராம காகித ஆவணம்
— இரா. ஜெயராமன் ... 1

நாகூர் தர்காக் கல்வெட்டு
(43-ஆம் இதழின் தொடர்ச்சி) ... 21

2. தமிழகமும் கணபதி வழிபாடும்
— நடன. காசிநாதன் ... 24

3. அரியலூர் மழவராயர்கள்
— ஆர். ராமசேஷன் ... 33

**இதழ் - 46**

1 புல்லிக் குறும்பூர் தூண் கல்வெட்டு
— க. குழந்தைவேலன் ... 1

2. திருக்குர்-ஆன் கையெழுத்துப் பிரதி
ச. செல்வராஜ் ... 7

அரியலூர் மழவராயர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி) ... 11

3. திருவுசாத்தான முடைய நாயனார் திருக்கோயில்
— வெ. இராமமூர்த்தி ... 14

4 The growth of marine Archaeology in India with special refference to Tamilnadu
— Natana. Kasinathan ... 22

5. ஏறூரும் பெருமான்
— கு. தாமோதரன்

6. இராசராசனின் புகழ்பாடும் இலக்கியம்
... — சொ. சாந்தலிங்கம்

7 தரங்கம்பாடி பகுதியில் கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு
... — கா. நெடுஞ்செழியன்

இதழ் : 47

1. கோடியக்காடு செப்பேடு
— நடன. காசிநாதன் ... 1

2. சோழர் காலத் தூண் கல்வெட்டு
... — கி. ஸ்ரீதரன் ... 9

3. முத்தூர் குலோத்துங்க சோழீஸ்வரர் கோயில்
— இரா. ப. கருணானந்தன் ... 11

4. சேதுபதி காசுகள்
— நாக. கணேசன் ... 16

5. கட்டபொம்மன் வழங்கிய செப்பேடு
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 21

6. சிரியக்கி பழஞ்சலாகை
— ஆர். ரங்கராஜ் ... 27

7. ஆலங்காயத்தில் அரிய பாறை ஓவியங்கள்
— ஆர். வசந்தகல்யாணி ... 31

8. கடலில் கிடைத்த புத்தர் சிற்பம்
— கா. நெடுஞ்செழியன் ... 35

9. கண்டன்விளை கல்லறைக் கல்வெட்டு
— தே. கோபாலன் ... 36

இதழ் - 48

1 நாங்கூர்க் குதிரைக் கல்வெட்டு
— க. குழந்தைவேலன் ... 1

2. இராசேந்திரனின் அரசகுரு
— நா மார்க்சியகாந்தி ... 3

3. சாலைக்கிராமத்தில் புதிய கல்வெட்டுகள்
... சொ. சாந்தலிங்கம் ... 7

4. கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனை வாழ்க்கை
— அ. அப்துல் மஜீத் ... 13

5. முதலாம் இராசராசன் இராசேந்திர சோழன் கால ஊராட்சி-புதிய திருப்பம்
— ஆ. பத்மாவதி ... 19

6. Archaic Tamil inscription from excavation
— Natana. Kasinathan ... 27

7. Karur Inscription of Kulottunga chola-1
— S. Swaminathan ... 36

**இதழ் - 49**

1. ஆசிரியம்
— சு. இராசகோபால் ... 1

Karur Inscription of kulothunga chola I
— (Continuation of the last issue) ... 6

2. பெரியபட்டினம்
— செ. இராசு ... 10

3. அரங்கனைப் பாடிய சைவ எல்லப்ப நாவலர்
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 17

4. பாலக் கோம்பை காமநாயக்கர் செப்பேடு
— வெ. வேதாசலம் ... 20

5. சேடப்பட்டிச் செப்பேடு
— மா. சந்திரமூர்த்தி ... 27

6. Story of Ciruttondar in sculptures
— Natana. Kasinathan ... 33

**இதழ் - 50, 51**

1. Antiquity of sea voyage in Tamilnadu
— Natana. Kasinathan ... 1

2. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்கால மண்ணித்தலைச் சிவாலயம்
— ப. புஸ்பரட்ணம் ... 6

3. Alambarai Fort
— A. Abdul Majeed ... 16

4. அண்மையில் கண்டெடுக்கப் பெற்ற படவேட்டுச் செப்புத்திருமேனிகளும் அணிகலன்களும்
— நடன. காசிநாதன் ... 20

5. வெள்ளலூர் : யவனர் வாணிகத்தால் எழுச்சி பெற்ற வேள்நகர் (சங்ககாலம்)
— ஆர். பூங்குன்றன் ... 31

6. பாலி மொழி பெற்ற தமிழ்ச்சொற்கள்
— சு. சௌந்தரபாண்டியன் ... 36

7. மகிமண்டலம் கோட்டை
— து. துளசிராமன் ... 40

8: சோழ நாட்டில் சமண சமயம்
— அர. வசந்தகல்யாணி ... 43

9. குமரி மாவட்டத்தின் கற்கால எச்சங்கள்
— தே. கோபாலன் ... 52

10. கோயிற்கலைச் செல்வங்களில் எழுத்துப் பொறிப்புகள்
— பொ. இராசேந்திரன் ... 54

11. Vijayanagar and Nayaka Inscriptions in Thanjavur
— Y. Subbarayalu ... 56

12. வெள்ளிக்குறிச்சி-பண்டாரம் உறவின் முறை செப்பேடு
— மா. சந்திரமூர்த்தி ... 60

13. Marine Archaeology Muscum in Tamilnadu
— Natana. Kasinathan ... 70

## இதழ் - 52

1. ஆழ்கடல் மரபுச் செல்வங்களையும் அழியாமல் காப்போம்
— நடன. காசிநாதன் ... 1

2. பெருமுடி பரமேசுவரர் திருக்கோயில்
— வே. இராமன் ... 12

3. சிற்பக் கலையின் மாட்சி
— ஏ. ஏகாம்பரநாதன் ... 18

4. கேரள மாநிலம் எடக்கல் மற்றும் செருபுழா ஆற்றங்கரை வடமொழி மற்றும் தமிழ்க் கல்வெட்டுகள்
— நடன. காசிநாதன் ... 20

5. சித்தம்பாக்கம் கோயிற் கதவுக் கல்வெட்டு
— க. குழந்தைவேலன் ... 26

ஐநூற்றுவன் குளம் - கண்டுபிடிப்பு
— து. செய்தி ... 28

6. வெள்ளை துர்க்கை
— ச. பரணன் ... 29

7. கடம்பூர்
— முத்து எத்திராசன் ... 31

8. உப்பு வேலூர் - ஒரு வரலாற்றுப் பார்வை
— மா. சந்திரமூர்த்தி ... 33

இதழ் - 53

1. வன்னிவலம்பட்டி திருமலை நாயக்கர் செப்பேடு
— வெ. வேதாசலம் ... 1

2. மயிலாப்பூர் விருபாக்ஷீஸ்வரர் கோயில்
— அர. வசந்தகல்யாணி ... 9

வாங்கல்
— செய்தி ... 12

3. இந்தியத் தொல் பழங்காலத்தின் தந்தை இராபர்ட் புரூஸ்புட்
— எஸ். ஸ்ரீகுமார் ... 13

நங்கூரம் வணிகர் குழு கல்வெட்டு
— செய்தி ... 15

4. ஆதிகேசவப்பெருமாள் கோயில், கீழ் மின்னல்
— கோ. அர்ச்சுனன் ... 16

5. கோந்தளம்
— ச. பரணன் ... 20

6. கொல்லிப்புறை காசு - ஓர் ஆய்வு
— ஆ. பத்மாவதி ... 22

அரிய தந்தச் சீப்பு
— செய்தி ... 26

7. பிரம்மதேசம்
— மா. சந்திரமூர்த்தி ... 27

8. அருள்மிகு உமாமகேசுவரர் திருக்கோயில்
— அ. அப்துல்மஜீத் ... 34

அரங்குளநாதர் கோயில் சூலக்கல்
— செய்தி ... 38

## இதழ் - 54

1. குன்னத்தூர் வீரசம்புகேசுவரர் கோயிலும் சம்புவராயர் கலைப்பாணியும்
மா. சந்திரமூர்த்தி ... 1

2. வலங்கைமான் - பாடைக் காவடி வழிபாடு சிறப்புச் செய்திகள்
— கா. நெடுஞ்செழியன் ... 11

3. Kammalas
— A. Abdul Majeed ... 15

4. தீப்பாய்ந்தாள் அம்மன் - பூம்புகார்
— கோ. முத்துச்சாமி ... 25

5. குயவர் செப்பேடு
— செ. போசு ... 31

6 தட்டாம்பாளையக் கல்வெட்டுகள்
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 35

7. துளைப் பொன்
— சு. இராசகோபால் ... 37

## இதழ் - 55

1. பழந்தமிழ் எழுத்துக் கல்வெட்டுகள்
— க. குழந்தைவேலன் ... 1

2 Alur Inscriptions of Rajendra Chola I
— S. Swaminathan ... 14

3. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் காட்டும் வரிகள், நிலம் மற்றும் வருவாய் நிர்வாகம்
— ரா. கண்ணன் ... 26

ஏரித்தூம்புக் கல்வெட்டு செய்தி ... 4

தொல்லியல் துறையின் அகழாய்வுகள் 1999-2000
— செய்தி ... 5

தேரிருவேலி ... செய்தி ... 9

சுவற்றியூரில் உள்ள அன்னபூரணியம்மன் கோயில்
— கல்வெட்டு செய்தி ... 11

நாயக்கர் காலக் காசுகள் கண்டுபிடிப்பு ... செய்தி ... 21

காசு ... செய்தி ... 40

## இதழ் - 56

1. நாகை நல்லூர் வணிகக்கல்வெட்டு
— கி. ஸ்ரீதரன் ... 1

2. ஏகாலியர் ஊர் மடம் என்ற உமிக்கிரி மடத்துக் கல்வெட்டு
— தே. கோபாலன் ... 4

3. பல்லவர் கால அரிய ஜேஷ்டா சிற்பம்
— அர, வசந்தகல்யாணி ... 7

4. பொய்கையார் - புதிய பெயர்க்காரணம்
— எஸ். சௌந்தரபாண்டியன் ... 9

5. கூகையூர்
ச. செல்வராசு ... 11

6. Navagrahas in Hindu Mythology Iconography
— M. Chandramoorthy ... 18

எல்லைக் கல்லில் இறைவன் பெயர் ... 28

7. சோழர் வரலாற்றில் புதிய ஒளி
— ஆ. பத்மாவதி ... 29

8. அலுவலக நடவடிக்கை குறிப்புகள் I ... 32

9. அலுவலக நடவடிக்கை குறிப்புகள் II ... 37

## இதழ் : 57

1. Recent Epigraphical Discoveries in Pandya Region
— C. Santhalingam ... 1

கமுதி - வழிவிட்ட அய்யனார் கோயில் கல்வெட்டு ... 5

2. Martial Arts of Tamilnadu
— M. Chandramoorthy ... 7

3. Rules for sculpting the Jain Statues in Ancient Tamil soil
— S. Soundarapandian ... 12

4. கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளிக் கல்வெட்டு
— கி. ஸ்ரீதரன் ... 14

5. வாழைத்தோட்டம் கன்னடக் கல்வெட்டு
— இரா. ப. கருணானந்தன் ... 16

6. அச்சந்திரம்-கல்வெட்டுகள்
— ஆ. பத்மாவதி ... 18

7. முகப்பேறு ஆய்வு
— சீ. ராமச்சந்திரன் ... 23

8. உடையார் கோயில்
— ச. பரணன் ... 27

9. சென்னையில் கி.பி- 17-ஆம் நூற்றாண்டு கிணறு
— சீ. வசந்தி ... 30

10. புதுப்பாடி வேத நாராயண பெருமாள் கோயில்
— துளசிராமன் ... 33

11. அண்மைக்கால அகழாய்வுகள் ... 37

## இதழ் - 58

1. மணிமேகலை காட்டும் தத்துவஞானம் தழைத்த வஞ்சியின் அமைப்பு
— அர. பூங்குன்றன் ... 1

2. சித்தகம்பாடி சிவனீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில்
— ச. செல்வராஜ் ... 6

மணல்மேடு ஈமத்தாழிகள் து. செய்தி ... 8

3. ஆரணி ஜாகீர்தாரர்களின் மாளிகை
— து. துளசிராமன் — 9

4. பல்லவர்கால முருகனின் சிறப்புத் தோற்றம்
— அர. வசந்தகல்யாணி ... 11

மூதேவிக்கு தனிக்கோயில் து. செய்தி ... 15

5. The Palaeolithic Archaeology of the Kortallayar river basin Tamilnadu
— Shanti Pappu and Kumar Akhilesh ... 16

இலத்தீன் வாசகத்துடன் ஆங்கிலேயர் காசு
— து செய்தி ... 23

6. தமிழகம், சீனா பண்டைத் தொடர்புகள்
— ப. சண்முகம் ... 24

பார்சனப்பள்ளி பாறைச் சிற்பங்கள் ... 31

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்.

7. Kamudi Fort
— R. Narayanan ... 32

8. மாசித் திருநாள் என்னும் மாசிமக நீராடல் விழா
— வெ. இராமமூர்த்தி ... 33

**இதழ் : 59**

1. இருங்காட்டுக்கோட்டை - ஓர் ஆய்வறிக்கை
— அர. வசந்த கல்யாணி ... 2

2. முற்காலப் பாண்டியர் காலத்து மடைகளின் அழிவும் :
சில புதிய கல்வெட்டுகளும்
முனைவர் வெ. வேதாசலம் ... 5

3. Report on the condition an Restoration of and Oil Painting brought from Ramalingavilasam Palace Museum, Ramanathapuram
— M.S. Ashok Deen ... 11

4. Korkai and Iron Smelting
— S, Ramachandran ... 15

5. சித்திரமேழிப்பிள்ளை கல்வெட்டு கண்டுபிடிப்பு
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 18

6. தலைச்சங்காடு கல்வெட்டுகள்
— கோ. முத்துச்சாமி ... 20

7. விக்டோரியா ஜுப்லி ரோடு
— இர. ஜெயராமன் ... 21

8. நென்மேலிக் கல்வெட்டுகள்
— முனைவர் ஆ. பத்மாவதி ... 22

9. ஆந்தகுடி சோமேசுவர சுவாமி கோயில் கல்வெட்டுகள்
— இர. ஜெயராமன் ... 26

10. மயில்மீது நடனம் புரியும் முருகன் சிற்பம்
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 31

11. துறையின் நிகழ்காலச் செயல்பாடுகள் ... 33

தொகுப்பு : தா. கோவிந்தன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் சார்பாக முனைவர் நா. மார்க்சியகாந்தி, உ.க.க. அவர்களால் வெளியிடப்பெற்றது.